# புனர்வாழ்வு புனரமைப்பு
# அமைச்சு

# ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டம் அடங்கிய கைநூல்




1988

# புனர்வாழ்வு புனரமைப்பு

# அமைச்சு

## ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டம் அடங்கிய

## கைநூல்

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| | பக்கம் |
| முகவுரை | |
| 1. இடம் பெயர்ந்த குடும்பங்கள் பெறக்கூடிய மீள் குடியமர்த்தல் படி | 1 |
| 2. வீடு திருத்தலும் புனரமைத்தல் நன்கொடையும், கடனும் | 2 |
| 3. உற்பத்தி முயற்சிக்கான நன்கொடை | 5 |
| 4. உற்பத்தி முயற்சிக்கான கடன் | 6 |
| 5. இந்தியாவிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு உரிய உதவி. | 7 |
| 6. உடல் ஊனங்களுக்கும் உயிரிழப்புக்களுக்கும் பெறக்கூடிய நிவாரணம் | 8 |

# முகவுரை

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி தொடக்கம் இற்றைவரை இடம் பெற்ற இனக் கலவரங்கள், வன்செயல்கள், உள்நாட்டு பதட்ட நிலை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட தனிநபர் குடும்பங்கள் பெறக்கூடிய நன்மைகளை இக் கைநூல் விளக்குகின்றது. இவற்றுள் சில நன்மைகள் அரசாங்க அதிபர் அல்லது அவரது பிரதிநிதிகளிடமிருந்து பெறக்கூடியவையாயும், ஏனையவை கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், கடன் வழங்கும் ஸ்தாபனங்களிடமிருந்து பெறக்கூடியவையாயும் அமையும்.

ஒரு குறிப்பிட்ட நன்மைக்கோ, நிவாரணத்துக்கோ உங்களது தகைமையை நிர்ணயிப்பதற்கு கிராமசேவகராலோ, அல்லது அவரின் சார்பில் உதவி அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்ட வேறொரு அரசாங்க உத்தியோகத்தராலோ நீங்கள் நேர்முக விசாரணைக்கு உட்படுத்தப்படுவீர்கள். சில நன்மைகள் உங்களது தகைமை, உங்களது சாதாரண வருமானம், உங்களது தொழிலின் தன்மை, உங்களுக்குத் தேவைப்படும் நிவாரணத்தின் வகை ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். நீங்கள் வெளிப்படுத்திய வருமானத்தைக் கொண்டு நீங்கள் பெறக்கூடிய நன்கொடைகளை மட்டுமன்றி, நீங்கள் பெறக்கூடிய கடன் வகைகளும் நிர்ணயிக்கப்படும். உங்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் பலதரப்பட்டனவாக இருப்பதால், உங்களை பேட்டி காணும் உத்தியோகத்தரின் கேள்விகள் எல்லாவற்றிற்கும் தவறாது விடைகள் கொடுக்கவும். நேர்முக விசாரணை முடிந்ததும் உங்கள் குடும்பத்திற்கு ஒரு பதிவு அட்டை உதவி அரசாங்க அதிபரினால் வழங்கப்படும்

## இந்தப் பதிவு அட்டையை தொலைத்து விடாதீர்கள்

உங்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடிய நன்மைகள் அத்தனையும் இந்தப் பதிவு அட்டையில் காட்டப்பட்டுள்ளன. நீங்கள் பெறுவதற்குத் தகுதி இல்லாத நன்மைகள் கீறிடப்படும். நீங்கள் பெறுவதற்குத் தகுதி உள்ள நன்மைகள் கீறிடப்படாமல் பார்ப்பதற்குத் தெளிவாக விடப்படும். நீங்கள் பெறுவதற்குத் தகுதி உள்ள நன்மைகளை அறிவதற்கு அட்டையில் கீறிடப்படாமல், இருக்கும் பெட்டிகளில் உள்ள சின்னங்களைக் கவனித்து, பின்பு இந்தக் கைநூலில் அதே சின்னங்களைக் கொண்ட பக்கங்களைப் பார்க்கவும்.

நீங்கள் பெறுவதற்குத் தகைமை உடையதாகக் கருதிய நன்மைகள் ஏதாவது உதவி அரசாங்க அதிபரினல் வெட்டப்பட்டிருந்தால், அரசாங்க அதிபருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

கிடைக்கக்கூடிய நன்மைகளின் விபரங்கள் பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் நன்மைகள் பெறக்கூடிய தகைமை பல காரணிகளினல் நிர்ணயிக்கப்படும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். இக் கைநூலில் விபரிக்கப்பட்டுள்ள நன்மைகள் எல்லாவற்றிற்கும் நீங்கள் தகுதி உடையவர் எனக் கருதி விடக்கூடாது. மேலதிக நன்மைகள் சில, காலம் தாழ்த்தியும் உங்களுக்குக் கிடைக்கலாம். சில நன்மைகள் பாதிக்கப்பட்டோரின் தேவைகளுக்கேற்ப மாற்றி அமைக்கப்படலாம். எனவே நீங்கள் மாவட்ட புனரமைப்பு இணைப்புக் குழுவிடமோ, உதவி அரசாங்க அதிபரிடமோ அல்லது கிராமசேவை உத்தியோகத்தரிடமோ ஏதாவது மாற்றங்கள் உங்களைப் பாதிக்கின்றனவா என்று விசாரித்து அறிந்துகொள்ளவும்.

# 1

# இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமர்தலுக்கான படி



உங்கள் பதிவட்டையில் இச்சின்னம் நீக்கப்படாதிருந்தால் குடும்பமொன்றுக்கு மீளமர்தல் நன்கொடைப் பணமாக ரூபா. 2000/- நீங்கள் மீளக் குடி இருத்தற்கு ஏதுவாக வழங்கப்படும்.

## தகைமை

உங்கள் சமூகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வேறு இடத்தில் தற்காலிகமாக வதிந்திருந்து அவ்வாறு பெயர்ந்து இருந்த காலத்தில் உங்கள் வீடு பாதிப்புற்ருே, முற்ருக அழிக்கப்பட்டோ அல்லது வீட்டுப் பொருட்கள் பாதிக்கப்பட்டோ, முற்ருக அழிக்கப்பட்டோ, களவாடப்பட்டோ இருந்திருந்தால் இந் நன்கொடை பெறுதற்கு உங்கள் குடும்பம் தகுதி வாய்ந்தது.

உங்கள் குடும்பம் முன்பிருந்த இடத்துக்குத் திரும்பிய பின்பே இந் நன் கொடையைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே மீளமர்த்தப்பட்டு முந்திய திட்டங்களின் கீழ் மீளமர்த்துப் படியைப் பெற்றுள்ள குடும்பங்கள் **இத் நன்கொடையைப் பெறுதற்கு உரித்துடையவராகார்.**

இவ்வுதவியைப் பெறுதற்கு உங்கள் குடும்பம் இடம் பெயர்ந்திருந்தற்கான அத்தாட்சிகொண்டு நிரூபிக்கவேண்டும். அகதி முகாம்களிஞல் வழங்கப்படும் பதிவு அட்டையோ அல்லது பங்கீட்டு அட்டையோ நீங்கள் இடம் பெயர்ந்து இருந்த மாவட்ட அரச அதிபரிஞல் வழங்கப்பட்ட சான்றிதழோ நீங்கள் இடம் பெயர்ந்ததை அத்தாட்சிப்படுத்தி பொருத்தமான அரசாங்க உத்தியோகத்தரிஞல் வழங்கப்பட்ட கடிதமோ கொண்டு உங்களின் நிலேயை அத்தாட்சிப்படுத்தலாம். உங்கள் வீடு முற்ருக அழிக்கப்பட்டிருந்தால் நீங்கள் அவ்வழிவை கிராம சேவை உத்தியோகத்தருக்கோ அல்லது உதவி அரசாங்க அதிபரிஞல் நியமிக்கப்பட்ட நேர்முக பேட்டி அலுவலருக்கோ காண்பித்து தகைமை பெற்றுக்கொள்ளலாம்.

## நன்கொடை பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்

இந் நன்கொடையை பெறுதற்கு உங்கள் குடும்ப பதிவட்டையுடன் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்குச் செல்லவும்.

# 2

# வீடு திருத்துதலும் புனரமைத்தல் நன்கொடையும், கடனும்


வீடமைப்பு நிவாரணம் குடும்பத்தின் சாதாரண வருமான அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். குறைந்த அளவிலான வருமானமுள்ள குடும்பங்கள் நன்கொடை பெறுவதற்கு தகைமை வாய்ந்தன. கூடியளவிலான வருமானத்தைப் பெறுபவர்கள் குறைந்த வீத வட்டியைக் கொண்ட கடனைப் பெறுவதற்கு தகுதிவாய்ந்தவர்கள் நடுத்தர அளவிலான வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்கள் கடனையும், நன் கொடையையும் ஒருங்கே பெறுவதற்கு தகைமை வாய்ந்தவை.

**நன்மைகள்**



உங்கள் குடும்ப பதிவு அட்டையில் இச் சின்னம் நீக்கப் படாதிருந்தால் ரூபா 15,000/- பெறுமதியான கட்டிடப் பொருட்களை அரசாங்க நன்கொடையாக உமது வீட்டைத் திருத்துவதற்கோ, புனரமைப்பதற்கோ நியமிக்கப்பட்ட விநியோகஸ்தரிடமிருந்து கொள் வனவு செய்வதற்கு மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்தோ, பிரிவு உதவி அரசாங்க அதிபரிடமிருந்தோ வவுச்சர் ஒன்றைப் பெற்றுக்கொள்லாம். இத்தொகையில் 15%கு (பதினைந்து வீதத்துக்கு) மேம்படாத ஒரு சிறு பகுதியை உங்கள் வேண்டுகோளின் பேரில் பணமாகப் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே பணமாகவோ, பண்டமாகவோ பெற்ற வீடமைப்பு உதவியின் பெறுமதி இத்தொகையிலிருந்து குறைத்துக் கொள்ளப்படும்.

இந்நன்மையைப் பெறுவதற்கு ரூபா 1,500/- அல்லது அதற்குக் குறைவாக வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் தகுதிவாய்ந்தவை.



உங்கள் குடும்பப் பதிவு அட்டையில் இச்சின்னம் நீக்கப்படா திருந்தால் உங்களுடைய வீட்டைத் திருத்துவதற்கோ, புனரமைப் பதற்கோ, ரூபா 15,000/- ற்கு மேற்படாத தொகையை கூட்டுறவு சிக்கன கடன் வழங்கு சங்கம் மூலமாகவோ அல்லது தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகம் மூலமாகவோ விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். கடன்கொடுக்கும் நிறுவனத்தினால் தீர்மானிக்

கப்பட்டபடி கடன் திருப்பிக் கொடுக்கும் ஆகக்கூடிய காலம் 15 வருடமாகவும் வட்டி வீதம் வருடத்திற்கு 6 ஆகவும் இருக்கும். ரூபா 701 க்கும் 1500 க்கும் இடையிலான தொகையை மாதாந்த வருமானமாகப் பெறுகின்ற குடும்பங்கள் மட்டுமே இக் கடனைப் பெறுகின்ற தகுதியுடையன வராவர்கள்



இச்சின்னம் உங்களது பதிவட்டையில் நீக்கப்படாமல் இருந்தால், வீட்டைத் திருத்துதற்கோ, புனரமைப்பதற்கோ, குடும்பம் ஒன்றுக்கு ஆகக்கூடிய தொகையான ரூபா 50,000 க்கு மேற்படாத கடனுக்கு இதன்கீழ் நிரல்படுத்தப்பட்ட கடன் வழங்குநருக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். கடன் வழங்கும் நிறுவனத்தினல் தீர்மானிக்கப் படுகின்றவாறு, ஆண்டுக்கு 6% வட்டியுடன் ஆகக்கூடியகாலம் 20 ஆண்டுகளில் இக்கடன் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். ரூபா 1501 - 5000 க்கும் இடையில் உள்ள தொகையை மாதாந்த வருமானமாகப் பெறுகின்ற குடும்பங்கள் மட்டுமே, இக் கடனைப் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவை.



இச்சின்னம் உங்களது பதிவட்டையில் நீக்கப்படாமலிருந்தால், வீட்டைத் திருத்துவதற்கு அல்லது புனரமைப்பதற்கு இதன்கீழ் நிரல்படுத்தப்பட்ட கடன் வழங்குநருக்கு, குடும்பமொன்றுக்கு ஆகக் கூடிய தொகையான ரூ. 1,50,000 க்கு மேற்படாத கடனுக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். இக்கடனுனது, கடன் வழங்கும் நிறுவனத்தினல் முடிவுசெய்யப்படக்கூடியவாருக, ஆகக்கூடியது 20 ஆண்டுக் காலத்துக்குள், ஆண் டொன்றுக்கு 6% வட்டியுடன் செலுத்தப்படல் வேண்டும். ரூ. 5000 க்கு மேற்பட்ட மாத வருமானம் உள்ள குடும்பங்கள் மாத்திரமே இக் கடன் பெறுவதற்குத் தகுதியுடையனவாம்.

கடன் பெறுவதறகான தகைமை

கடனைத் திருப்பிக் கொடுக்கும் குடும்பத்தின் ஆற்றலின் அடிப்படையில் இக்கடன்கள் அங்கீகரிக்கப்படும். கடன் தொகை குடும்பத்தின் மாதாந்த மொத்த வருமானத்தைக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

பிணை

கடன் வழங்கும் நிறுவனத்தினல் கடனுக்கு வேண்டிய பிணை என்ன என்பது தீர்மானிக்கப்படும்.

## ஏற்கனவே புனரமைத்த குடும்பங்களுக்கான விசேட ஒழுங்கு

அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவியைப் பெருது தங்கள் வீடுகளைத் திருத்தியோ, புனரமைத்தோ உள்ள குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் இவ்வுதவியைப் பெறத் தகைமை உள்ளவர்கள் ஆவர். உங்கள் குடும்பம் இத்தரத்திற்குள் அடங்கினுல், உங்கள் அரசாங்க அதிபருக்கு மேன்முறையிட்டு உங்கள் விடயத்தைப் மறுபரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்ளவும்.

## உதவி பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்

நன்கொடையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தகுதி பெற்ற குடும்பங்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்குச் சென்று பண உதவியையும், கட்டிடப் பொருட்களுக்கான வவுச்சர்களையும் பெற்றுக்கொள்ளலாம். கட்டிடப் பொருட்கள் விநியோகஸ்தர்களின் பட்டியல் அங்கு உங்களுக்குத் தரப்படும்.

ரூபா 15,000 வரைக்கும் கடன் பெறத் தகுதி வாய்ந்த குடும்பங்கள் கூட்டுறவுச் சிக்கனக் கடன் சங்கத்திற்கோ அல்லது உங்களுக்கு அண்மையில் உள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக் காரியாலயத்திற்கோ செல்ல வேண்டும்.

ரூபா 15,000 க்கு மேற்பட்ட கடனைப் பெறத் தகுதி வாய்ந்த குடும்பங்கள், அண்மையில் உள்ள இலங்கை வங்கிக் கிளைக்கோ அல்லது வீட்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கோ அல்லது அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கோ விண்ணப்பிக்கலாம்.

வேறு கடன் வழங்கும் நிறுவனங்களும் பிற்காலத்தில் பங்குபற்றக்கூடும்.

# 3

# உற்பத்தித் திறன்வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடை



உங்களுடைய குடும்பப் பதிவு அட்டையில் இச்சின்னம் நீக்கப் படாமல் இருந்தால், உங்கள் வருமான மூலத்தை மீள அமைத்துக் கொள்ள உங்களுக்கு உதவுவதற்காக, காசாகவோ அல்லது பண்டமாகவோ ரூ. 4000/- நன்கொடையொன்று பெறுவதற்கு உங்களது குடும்பம் தகைமை உடையதாகும். இவ்வுதவியானது, மாதாந்த வருமானமாக ரூ. 2500/- க்குக் குறைவாகப் பெறும் குடும்பங்களுக்கு மட்டுமே கிடைக்கும். ஏற்கனவே பொருளாதார உதவியாகப் பெற்ற தொகை இந்நன்கொடையில் இருந்து குறைத்துக் கொள்ளப்படும்.

தகைமை

உங்களது குடும்பத்தின் பிரதான உழைப்பாளிகள் சுயமே தொழில் செய்து கொண்டிருந்தவர்களாக இருந்து, கலவரம் காரணமாக உங்களது குடும்பம் இடம் பெயர்ந்த காரணத்தால் பாதிக்கப்பட்டிருந்தால், உழைப்பாளிகள் தொழில் செய்யும் இடங்கள் சேதப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அழிக்கப்பட்டிருந்தால் ; நன்கொடை பெறுவதற்கு உங்களது குடும்பம் தகைமையுடையதாகும்.

தகைமை பெறுவதற்கு, உங்களது வருமான மூலம் பாதிக்கப்பட்டிருந்தது என்பதற்கான அத்தாட்சியை நீங்கள் காட்ட வேண்டும். இது, நலன்புரி நிலையத்திலிருந்ததற்கான (அகதி முகாம்) பதிவு அட்டையொன்றாகவோ அல்லது பங்கீட்டு அட்டையொன்றாகவோ, நீங்கள் சென்று தங்கிய மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்தான பதிவுச் சான்றிதழ் ஒன்றாகவோ அல்லது உங்களால் தொழில் புரிய முடியவில்லை என்று அத்தாட்சிப் படுத்தும் பொருத்தமான அரசாங்க அதிகாரியிடமிருந்து பெற்ற கடிதமொன்றாகவோ அல்லது நேர்முகப் பரிசீலனை அலுவலரின் திருப்திக்கேற்றவாறான ஏதேனும் வேறு அத்தாட்சியாகவோ இருக்கலாம்.

உங்களது தொழிலிடம் அழிக்கப்பட்டிருந்தால், இவ்வுதவி பெறுவதற்குத் தகைமை உடையவராவதற்கு, கட்டிடத்தை அல்லது அமைவிடத்தை நேர்முகப் பரிசீலனை அலுவலருக்குக் காண்பித்தல் வேண்டும்.

நன்கொடை பெற்றுக்கொள்ளும் இடம்

நன்கொடையைப் பெறுவதற்கு அல்லது பண்டமாக உதவிபெறுவதற்கு, உங்களது உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு உங்களது குடும்பப் பதிவு அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

# 4

# உற்பத்தித் திறன்வாய்ந்த தொழில் முயற்சிகளுக்கான கடன்




உங்களது குடும்பப் பதிவு அட்டையில் இச்சின்னம் நீக்கப்படாமலிருந்தால், உங்களது தொழிலை அல்லது தொழில் வாய்ப்பு மூலத்தை மீண்டும் ஆரம்பிக்க உங்களுக்கு உதவுவதற்காக, குடும்பம் ஒன்றுக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா. 200,000/- வரை குறைந்த வட்டியோடு கூடிய உற்பத்தித் திறன்வாய்ந்த தொழில் முயற்சிக் கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்க நீங்கள் தகைமையுடையவராவீர்கள். குடும்பத்தின் பிரதான உழைப்பாளிகள் சுய தொழில் புரிந்திருப்பின் அக்குடும்பம் இக்குறைந்த வீத வட்டிக்கு விண்ணப்பிக்கத் தகைமை உடையது.

## வட்டி வீதங்கள்

வருடாந்த வட்டி வீதம் 9 % ஆக இருக்கும்.

## கடன் பெறுவதற்கான தகைமை

குடும்பம் ஒனறுக்கு வழங்கப்படக்கூடிய கடன் தொகை. அவர்களின் கடனைத் திருப்பிச்செலுத்தும் ஆற்றல், மாதாந்தவருமானம் என்பவற்றின் அடிப்படையிலேயே கடன்வழங்கும் நிறுவனத்தினால் தீர்மானிக்கப்படும்.

## உதவி பெறும் இடம்

கடன்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தங்களுக்கு அண்மையிலுள்ள பின் வரும் பங்குபற்றும் நிறுவனங்களின் கிளைக்குச் செல்லுதல் வேண்டும்.

— இலங்கை வங்கி (கமநலச் சேவை நிலையக் கிளைகள் உட்பட)

— மக்கள் வங்கி

— ஹட்டன் நாஷனல் வங்கி.

# 5

# இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கான உதவி

8

உங்கள் குடும்பம் அகதியாக இந்தியாவிலிருந்து திரும்பி இருந்தால் இச்சின்னம் உங்கள் பதிவட்டையில் நீக்கப்படாமல் இருக்கும்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் " அ. ஐ. நா. உ. ஸ். " இந்தியாவிலிருந்தோ, ஏனைய நாடுகளிலிருந்தோ திரும்பும் அகதிகளுக்கென விசேட உதவித் திட்டம் ஒன்றை நிறுவியுள்ளார். இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகள் ' அ. ஐ. நா. உ. ஸ். ' ரின் மேற்பார்வையின் கீழ் தலைமன்னார், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக தங்கும் நிலையங்களில் வரவேற்கப்படுவார்கள். " அ. ஐ. நா. உ. ஸ். " திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவியை 1983 யூலை 24 ஆம் திகதியில் இருந்து அகதிகள் என வகுக்கப்பட்ட குடும்பங்கள் பெற்றுக்கொள்ளலாம். தாங்களாகவே இலங்கை திரும்பும் அகதிகளும் இந்திய அல்லது ஏனைய அதிகாரிகளினால் கொண்டுவரப்படும் அகதிகளும் இவ்வுதவியைப் பெறுதற்குத் தகைமை உடையவர்களாவார்கள்.

நன்மைகள்


இலங்கை திரும்புகின்ற அகதிகளுக்குள்ள உதவியானது உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவியில் இருந்து வேறுபடாது. ' அ. ஐ. நா. உ. ஸ். ' இத்தகைய சில வசதிகளை இலங்கை அரசாங்கம் வழங்குவதில் உதவி செய்வதோடு, சுகாதார, இளைஞர் விவகார, கல்வி, கடற்றொழில் போன்ற குறித்த சில அமைச்சுகளின் உதவியுடன், வழமையான சேவைகளுக்கு மீள உயிர் கொடுத்தல், விசேடமாக இடம் பெயர்ந்த இளைஞர்கள் மீண்டும் பயனுள்ள தொழிலில் ஈடுபடுவதற்கும் சில மேலதிகமான நன்மைகளையும் வழங்குகின்றது.

தகவல்

உதவி பெற்றுக்கொள்ளல் தொடர்பிலான தகவல் பெறுவதற்கு கிராம சேவை அலுவலருடன், உதவி அரசாங்க அதிபருடன் அல்லது ' அ. ஐ. நா. உ. ஸ். ' அலுவலர்களுடன், அவர்களது கிளை அலுவலகங்களில் தொடர்புகொள்ளவும். மேலும், ' அ. ஐ. நா. உ. ஸ். ' உப அலுவலகங்கள் எவையும் தாபிக்கப்படாத மாவட்டங்களில், நாடு திரும்பும் அகதிகள் தத்தமது மாவட்டங்களை வந்தடைந்ததும், அவர்களுடன் ' அ. ஐ. நா. உ. ஸ். ' அலுவலர்களும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சைச் சேர்ந்த அலுவலர்களும் தொடர்பு கொள்வார்கள்.

# 6

# ஊனமுற்றோர்களுக்கும் உயிரிழப்புக்களுக்கும் உரிய நிவாரணம்




உங்கள் பதிவு அட்டையில் இச்சின்னங்கள் நீக்கப்படாதிருந்தால் உங்கள் குடும்பத்தில் அசம்பாவிதங்களினால் ஊனம் அல்லாவிட்டால் உயிரிழப்பு ஏற்பட்டதனாலான செலவினங்களை ஈடுசெய்யும் முகமாக பண உதவி வழங்கப்படும்.

## தகைமை

இத்திட்டம் அரச, அரச கூட்டுத்தாபன, உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச சார்புள்ள நிறுவன ஊழியர்களுக்கு ஏற்புடையதாகாது. அவர்களுடைய விண்ணப்பங்கள் தொடர்புடைய வேலைகொள்வோரினால் பரிசீலிக்கப்படும். அசம்பாவிதங்களினால் ஊனமுற்ற ஒருவரோ, குடும்ப அங்கத்தவரை இழந்த ஒரு குடும்பமோ இந்நிவாரணத்தை விண்ணப்பித்துப் பெறுவதற்கு உரித்துடையவராவார். பாதுகாவலரோ, பெற்றோரோ ஊனமுற்ற ஒரு பிள்ளைக்காக விண்ணப்பிக்கலாம். இந்நிவாரணத் திட்டத்தின் கீழ் உங்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவித்தொகை எவ்வளவு என்பதை நிர்ணயிப்பதற்கும் தேவைப்படுமிடத்து படிவங்களை நிரப்புவதில் உங்களுக்கு உதவி அளிப்பதற்கும் நேர்முகப் பரிசீலனை அலுவலர் உங்களைப் பேட்டி காண்பார்

## நன்மைகள்

பண உதவி பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும் :—

(1) வளர்ந்தவர் ஒருவர் உயிரிழந்திருந்தால் ரூபா 25,000/- இத்துடன், பராயமடையாத அன்னாரில் தங்கியிருந்த பிள்ளை ஒவ்வொன்றுக்கும் ரூபா 5,000/- விகிதம் ஆகக்கூடிய நான்கு பிள்ளைகளுக்கு வழங்கப்படும்.

(2) பராயமடையாத ஒருவர் உயிரிழந்திருந்தால் ரூபா 15,000/- வழங்கப்படும்.

(3) வயதுவந்தவர் ஒருவர் ஊனமுற்றிருந்தால் ஆகக்கூடிய தொகையாக ரூபா 25,000/- வழங்கப்படும். வழங்கப்படும் தொகை செயல் இழப்பு தன்மையையும் வீதத்தையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

(4) பராயமடையாத ஒருவர் ஊனமுற்றிருந்தால் ஆகக்கூடிய தொகையாக ரூபா 10,000/- வழங்கப்படும். வழங்கப்படும் தொகை செயல் இழப்பு தன்மையையும் வீதத்தையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

இந்நிவாரணத்தைப் பெறுதற்கு வேண்டிய படிவங்களை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பின்வரும் பொருத்தமான பத்திரங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் :

5 I **ஊனமுற்றோர் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்**

(i) குடும்பப் பதிவு அட்டை

(ii) வைத்திய அத்தாட்சிப் பத்திரம்

(iii) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்

(iv) பொலிசு அறிக்கை

II **உயிரிழப்புக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்**

(i) குடும்பப் பதிவு அட்டை

(ii) மரணச் சான்றிதழ்

(iii) திருமண அத்தாட்சிப்பத்திரம்

(iv) பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள்

(v) பொலிசு அறிக்கை

இவற்றுள் ஏதாவது ஒன்று பெறமுடியாமல் இருந்தால் உங்கள் விண்ணப்பம் அரசாங்க அதிபரின் அத்தாட்சிப்படுத்தலின் அடிப்படையைக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

*Sathosa Printers W 9234*

Printed at Sathosa Printers Ltd